[திரு. துரைமுருகன்] [2023 அக்டோபர் 11

"பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-21 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

18. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

158. 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மனித நோய் எதிர்ப்பாற்றல் குறைக்கும் கிருமி மற்றும் பெறப்பட்ட நோய் எதிர்ப்பாற்றல் குறைபாட்டு அறிகுறிகள் (தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகளை இயற்றியது குறித்து மருத்துவம்-மக்கள் நல்வாழ்வு (இசட்1)த் துறையின் 25-5-2023 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 159-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [மனித நோய் எதிர்ப்பாற்றல் குறைக்கும் கிருமி மற்றும் பெறப்பட்ட நோய் எதிர்ப்பாற்றல் குறைபாட்டு அறிகுறிகள் (தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 2017 (மத்திய சட்டம் 16/2017) 49(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

159. 1963 ஆம் ஆண்டு அறநிறுவனங்களின் சொத்துக்களை நிர்வகித்தல் மற்றும் பாதுகாத்தல் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி4-2) துறையின் 24-7-2023 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்

2023 அக்டோபர் 11]
278-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

160. 2022–2023 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் ஐம்பதாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

161. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் ஐம்பதாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

162. 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் லிட். இன் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

163. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் லிட். இன் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

164. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் லிட். இன் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

165. 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (நகர்ப்புற ஏழைகளுக்கான வீட்டுவசதி குறித்த செயலாக்கத் தணிக்கை). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

166. இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மை அமைப்பு குறித்த செயலாக்கத் தணிக்கை). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

167. 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (இணக்கத் தணிக்கை). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

386. 2020–2021 ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தணிக்கை அறிக்கை–ஆண்டுக் கணக்குகள். (தமிழ்)

387. 2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு விழிப்புப் பணி ஆணையத்தின் நாற்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

388. 2023–2024 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் நிலை குறித்த ஆய்வு. [தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டம், 2003 (சட்டம் எண் 16/2003) 6(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

389 முதல் 438 வரை. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஆறாவது முதல் நூற்று ஐம்பத்து ஐந்தாவது வரையிலான அறிக்கைகள். (2023–2024)

439 முதல் 448 வரை. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்து நான்காவது முதல் அறுபத்து மூன்றாவது வரையிலான அறிக்கைகள். (2023–2024)

449. மனுக்கள் குழுவின் இருபத்தொன்றாவது அறிக்கை. (2023–2024)